# சமய இலக்கியங்களும் அறவியல் கருத்தாக்கங்களும்



1

பதிப்பாசிரியர்கள்
மு.சாரதா, க.அன்பரசு
நா.அன்பு, பி.பிரிஜிலா ராஜம்

21. சாதி ஒழிப்பில் மணிமேகலை சுட்டும் ஓங்குஉயர் பெரும்சிறப்பு
நா.குமுதா, 129

22. சங்க இலக்கியத்தில் மர வழிபாடு
முனைவர் குளோரியா வி.தாஸ் 136

23. மகாவம்சம் காட்டும் அறச் சிந்தனைகள்
கௌரி லக்சுமிகாந்தன், 143

24. மட்டுநகர் ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் ஆலயத்திற்குரித்தான மாரியம்மன் குளிர்த்திப் பாடல்களில் வலியுறுத்தப்படும் அறவியல் கருத்துக்கள் - ஓர் ஆய்வு
து.கௌரீஸ்வரன், 150

25. இந்து சமய பக்தி இயக்கங்களின் எழுச்சி நிலை - ஓர் ஆய்வு
இ.சகாயசீலன் 157

26. பாலைத்திணையில் கருப்பொருள் மயக்கம்
முனைவர் வெ.சங்கீதா 163

27. பெரியபுராணம் அப்பூதிஅடிகள் நாயனார் புராணத்தில் அறக்கருத்தாக்கம்
முனைவர் ந. சத்தியா, 170

28. அரங்கேற்றுகாதையில் அரங்க அமைப்பு முறை
செ.சத்யா, 176

29. வசந்தன் கூத்துப் பாடல்களில் சமூக அறவொழுக்கம் - ஓர் ஆய்வு
சு.சந்திரகுமார், 182

30. பெரியபுராணம் புலப்படுத்தும் அறவியற்சிந்தனைகள் ஒரு சமூகவியற் பார்வை.
சந்திரசேகரன் சசிதரன் 189

# மகாவம்சம் காட்டும் அறச் சிந்தனைகள்

**கௌரி லக்சுமிகாந்தன்,**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

மகாவம்சம் என்பது இலங்கை வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கி, அதேவேளை பௌத்த சமயத்தை முதன்மைப்படுத்தி தொகுக்கப்பட்ட நூலாகும். இது பௌத்த பிக்குகளினால் பாளி மொழியில் ஏட்டுச்சுவடிகளில், செய்யுள் வடிவில் காலவரிசையாக குறித்து வைத்திருந்தவற்றை மூலமாகக்கொண்டு, தொகுக்கப்பட்ட இலங்கையின் பழமையான தொகுப்பு நூலாகும். முற்காலத்தில் பேசப்பட்டு வந்த மகாவங்ச அட்டகதா என்பதைத் தழுவித் தொகுக்கப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இந்த நூல் கி.பி 6ஆம் நூற்றாண்டளவில், பாளி மொழியில், மகாநாம தேரர் எனும் பௌத்த பிக்குவினால் தொகுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

தேரர் ஒரு பௌத்தப் பிக்குவாக தேரவாத பௌத்தத்தை ஆதரிக்கும் நோக்குடனேயே இந்நூலை ஆக்கியுள்ளார். அவரது நோக்கத்திற் கேற்ப பௌத்தத்தை முதன்மைப்படுத்துவதற்காக நடப்புக்கு அப்பாற்பட்ட கற்பனையான விடங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் மகாவம்சத்தைத் தவிர்த்து விட்டு இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்ய முடியாது.

கி.மு ஆறாம் நூற்றாண்டு இந்தியாவில் இருந்து விஜயன் எனும் இளவரசன் வந்தான் என்பது முதல், கி.பி 361ஆம் ஆண்டு மகாசேனன் ஆட்சி செய்தான் என்பது வரை இலங்கையின் வரலாற்று குறிப்புகளையும் காலவரிசையாக மகாவம்சம் விவரிக்கின்றது. இந்நூல்

தொடர்ச்சியான வரலாற்றைக் கூறுகின்ற மன்னர்கள் தொடர்பான அதேநேரம், மகாவிகாரைக்கும் அது சார்ந்த பிக்குகளின் நலனுக்காக செய்த அறச்செயல்களை முதன்மைப்படுத்திக் கூறுகின்றது. சங்கத்தாருக்கு விகாரைகளை அமைத்துக் கொடுத்தல், சேதியங்களை நிர்மாணித்தல், அன்னதானம் வழங்குதல், ஆடைகள், மருந்து முதலானவற்றை தானமளித்தல் என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கன. அத்துடன் பல அத்தியாயங்களின் இறுதிச் செய்யுள் அறச்சிந்தனையை வாசிப்போருக்குக் கூறிச்செல்கின்றமை சிறப்பான விடயமாகும்.

1) நீர்ப்பாசனப் பணிகள்: இலங்கை வரலாற்றில் அரசர்களது பிரதானமான அறப்பணியாக நீர்பாசன ரீதியிலான சேவை கருதப்பட்டது. அந்தவகையில் பண்டுகாபயன் அபயவாவி (பசவக் குளம்), காமினி வாவி, ஜயவாவி ஆகிய குளங்களை அமைத்தமை பற்றி மகாவம்சம் எடுத்துரைக்கின்றது (M.V.X:88). அவனது பேரனான தேவநம்பியதீசன் திஸாவாவியை கட்டினான் (M.V.XX:20). குத்தகண்ண தீஸன் வண்ணகம் எனும் கால்வாய், அம்பதுர்க்க குளம், பாயோலு பாலம் என்பவற்றை அமைத்தான் (M.V.XXXIII). ஆமந்தகாமணி மன்னன் மகாகாமேந்திக் குளத்தினை உருவாக்கினான் (M.V.XXXV:2-4).

இளநாகன் காலத்தில் திஸ்ஸ வாவியும், தூரதிஸ்ஸ வாவியும் கட்டப்பட்டன. இவனின் பின்னர் நீர்ப்பாசனத்திற்கு மிக முக்கிய பங்காற்றிய மன்னனாக வசபனைக் (கி.பி 67-111) கூறலாம். இவனது காலம் ஓரளவு பெரிய குளங்களை கட்டும் முறைமையானது தொடக்கி வைக்கப்பட்டது. இம்மன்னன் மகவிலச்சி, மானகெட்டிய, கிரிவடுன்ன, நொச்சிப் பொத்தான, அக்வதுற முதலிய பதினொரு குளங்களையும் எலகரஅல முதலிய பன்னிரு கால்வாய்களையும் கட்டுவித்தான் என்று வம்சக் கதைகள் உரைக்கின்றன. அத்துடன் இவனது ஆளிசார கால்வாயானது அம்பன் கங்கையில் அமைக்கப்பட்ட அணையிலிருந்து தொடங்கியது. இதனடிப்படையில் நோக்கின் பெருங்கால்வாயை கட்டும் திறமைமிகு மன்னனாக இவன் கொள்ளப்படுகின்றான் (M.V.XXXV:84-100).

மின்னேரியத் தெய்வம் எனக் போற்றப்படுகின்ற மகாசேன மன்னனது நீர்ப்பாசனத்திற்கான பங்களிப்புக்கள் மிக முக்கியமாகக் கூறப்படவேண்டியவை. மின்னேரியாக்குளம், மாகனதராவ வாவி, குருளு வாவி, ரந்திச (கவுடுலு) நீர்தேக்கம், மாகல்ல வாவி உள்ளிட்ட

பதினாறு குளங்கள் இவனது நீர்பாசனத்திற்கான பங்களிப்பினை எடுத்தியம்புகின்றன. அத்துடன் உருளு வாவி, மகாகணதர வாவி, மாகளு வாவி என்பனவும் இவனால் கட்டப்பட்ட குளங்களே என்று தற்போது கூறப்படுகின்றன. மேலும் எலகர கால்வாயின் இரண்டாவது கட்டப் பணிகள் மகாசேனனால் முன்னெடுக்கப்பட்டன என்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் பப்பதன்ன கால்வாயினை அமைத்த பெருமையும் இவனையே சாரும். பப்பதன்ன கால்வாயானது அவனை மின்னேரியத் தெய்வமாக போற்றும் வகையிலும் நீர்வளம் சிறக்கும் வகையிலும் அவனால் அமைக்கப்பட்டது (M.V.XXXVII:47-50).

2) பௌத்த சமயத்திற்காற்றிய அறப்பணிகள்: கி.மு 247-207 வரை இலங்கையை ஆட்சி செய்த தீசனது ஆட்சிக் காலத்திலேயே பௌத்தம் இலங்கையில் அறிமுகமானது. அரசனால் பௌத்த பிக்குகளுக்காக ஒரு மகாவிகாரை நிறுவப்பட்டது. இக்காலம் முதலாக அகிம்சையும் தியானமும் முதன்மைப்படுத்தப்படுகின்றன. மகாவிகாரையை மையப்படுத்திய தேரவாத பௌத்தத்தை ஆதரிப்பதே அரசர்களின் பிரதான அறப்பணியாகக் கருதப்பட்டது. தேவநம்பியதீஸன் என மகாவம்சம் கூறும் இவ்வரசனால் மேற்கொள்ளப்பட்ட சமயப் பணிகள் மேல்வருமாறு அமைகின்றன. சேதியபர்வத விகாரை அமைத்தமை, புத்தரின் காரை எலும்பை வைத்து தூபராம எனும் தூபி அமைத்தமை, மஹாபோதி மரத்தை நட்டமை, பெண் துறவிகளுக்காக உபாஸிகா மடமும், ஹதால்ஹக மடமும் கட்டிமுடித்தமை, இராசதானிப் பகுதிக்குள் ஒரு யோஜனை தூரத்திற்கு ஒரு விகாரம் வீதம் அமைத்தமை, அரச குடும்பத்தைச் சேர்ந்த பிக்குகளுக்காக இஸ்ஸர சமணக, பத்மதூபா, வேசகிரி, ஜம்புகோள விகாரம், தீச மஹாவிகாரம், பாசினராமா ஆகிய விகாரைகளையும், மகாபாலி எனும் மடத்தையும் அமைத்தமை முதலானவையாகும் (M.V.XVIII:11-12, XX:14-27).

மன்னன் மகாசிவன் நாக ரங்கண விகாரை அமைத்தான் (M.V.XXI:2). அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சூரதிஸன் நகரின் தென்புறத்தில் ஹத்திகந்த, கோண கிரிக ஆகிய விஹாரங்களைக் கட்டினான். தாரமலையில் பாசீன பர்வத விஹாரத்தையும், ரஹரகா அருகில் கோலம்ப ஹாலக விஹாரத்தையும் கட்டினான். அரித மலையடிவாரத்தில் மகுலக விஹாரத்தையும், கிழக்கே அச்சகல்லக விஹாரத்தையும், கந்த நகரத்துக்கு வடக்கே கிரிநீல வாகன விஹாரத்தையும் கட்டினான். இது போன்ற அருமையான 500

விஹாரங்களும் இவ்வரசனால் இலங்கை முழுவதும் பல இடங்களில் கட்டப்பட்டன. ஆட்சிக்கு வருவதற்கு முன்பும், ஆட்சி செய்த போதும், அறுபது வருடகாலம் (புத்தம், தர்மம், சங்கம்) மும்மணிகளுக்கும் பக்தி விசுவாசத்துடன் நேர்மையாக இருந்தான் (M.V.XXI:2-8).

உபராஜனான மகாநாகன் ரோஹணத்திற்குச் சென்று அங்கு நாக மகா விஹாரம், கண்டர விஹாரம் போன்ற வேறு பல விஹாரங்களையும் ஏற்படுத்தினான் (M.V.XXII:9). காக்கவண்ணதீஸன் தீச மகா விகாரை, சீதள பர்வத விஹாரம், கமித வாலி விஹாரம், கூடாலி விஹாரம் போன்றவற்றை அமைத்தான். பிக்குகளுக்குத் தேவையான மலர்கள், மருந்துகள், உடைகள், வாசனைத் திரவியங்கள் ஆகிய நான்கு பொருட்களையும் இடைவிடாது வழங்கி வந்தான். இவனது மனைவியான விகாரமாதேவி பௌத்த தேரர்களை பராமரித்ததுடன் மேலே கூறியவற்றை தானமாக வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது (M.V.XXII:23-24).

காக்கவண்ண தீஸனின் மகனான துட்டகைமுனு ரோகணவிலிருந்து அனுராதபுரத்தை கைப்பற்றும் நோக்கில் 32 தமிழ் அரசர்களை வெற்றி கொண்டான். அதன் பின் எல்லாளனைத் தோற்கடித்து அனுராதபுர இராசதானியை தம் வசமாக்கினான். போரின் பின்னர் இலட்சக்கணக்கான மக்கள் அழிய நேரிட்டதையிட்டு மனம் வருந்தி, பிராயசித்தம் செய்ய விளைந்தான். இது அவனது தர்ம சிந்தனையை வெளிப்படுத்துகின்றது (M.V.XXV:104). இவனால் தொண்ணூற்றி ஒன்பது விஹாரங்கள் கட்டப்பட்டன, பத்தொன்பது கோடி செலவில் மாரிசவதி விஹாரம் கட்டப்பட்டது. விஹாரத்தில் பெரியதும் அழகானதுமான ஒரு முற்றத்தை அமைத்து அங்கு பிக்குகளுக்கு தாராளமாகப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்தான், நூறாயிரம் கஹபணத்தில் தொடங்கி ஆயிரமாயிரம் கஹபணத்தில் பிக்குகளுக்கு தானமளித்தான் (M.V.XXVI:21). முப்பது கோடி செலவில் லோகாபுராஸாதவை அமைத்தான் (M.V.XXVII). நூறாயிரம் பணம் செலவழித்து மகாபோதி விருட்சத்துக்கு மாபெரும் விழா நடத்தினான், சேதியம் கட்டுவதற்கு மக்களின் உழைப்பை உறிஞ்சாது, அவர்களுடைய பணிக்கேற்ற ஊதியத்தை எடுத்துச் செல்லும் வகையில் நான்கு வாயிலிலும் தலா 8000 பொற்காசு, ஆயிரம் மூட்டை உடை, சர்க்கரை, எண்ணெய், தேன் முதலானவற்றை வழங்கினான் (M.V.XXX:17-20). சொத்துக்களைச் சேர்த்து வைப்பதை பயனற்றதாகக்

கருதி தாராளமாக வழங்கினான். பன்னிரண்டு இடங்களில் புத்த பெருமானுக்கு வெள்ளைத் திரியிட்ட எண்ணெய் விளக்கை எரியவிட்டான்; இருபத்தி நான்கு விசாகத் திருவிழாக்களை நடத்தினான்; தீவிலுள்ள பிக்குகளுக்கு மூன்று தடவை சீவர உடைகளை அளித்தான்; உபோசத விழாக்களுக்கு தீவிலுள்ள எட்டு விஹாரங்களில் மாதத்தில் ஒருநாள் விளக்குகளுக்கான எண்ணெய் வினியோகிக்கச் செய்தான்; இலங்கையிலுள்ள விஹாரங்களில் எல்லா இடங்களிலும் மார்க்கத்தைப் போதிக்க ஏற்பாடு செய்தான்; போதகர்களுக்குப் பரிசுகள் வழங்கினான்; தர்மத்தைப் போதித்த ஒவ்வொருவருக்கும் ஒரு நாழியளவு வெண்ணெயும், வெல்லப்பாகும், சர்க்கரையும் தருமாறு கட்டளையிட்டான் (M.V.XXXII: *33-57*).

சத்தாதிஸ மன்னன் மகா ஸ்தூபத்தின் எஞ்சிநின்ற வேலைகளைச் செய்து முடித்தான். தீக்கிரையான லோகபாஸாதா ஒரு மீண்டும் புதிதாக ஏழு மாடி உயரத்துக்குக் கட்டினான். தட்சிண கிரி விஹாரம், கல்லகாலன விஹாரம், பக விஹாரம், பெதங்க வாலிக விஹாரம், வேலங்கா விதிகா விஹாரம், தூபலவாபி தீஸக விஹாரம், தூர தீசகவாபி, மாது விஹாரம், தீகவாபி விஹாரம் என்பவற்றைக் கட்டினான். அனுராதபுரத்திலிருந்து தீகவாபி வரை ஒவ்வொரு யோஜனை தூரத்துக்கும் ஒரு விஹாரம் கட்டினான் (M.V.XXXIII: *7-12*).

சத்தாதிஸ மன்னனின் மூத்த மகன் லங்காதீசன் கிரிகும்பிலா என்ற அழகிய விஹாரத்தை அமைத்தான். இதே அரசனுடைய இளைய மகன் கண்டர விஹாரத்தைக் கட்டினான். வட்டகாமினி அபயனது காலத்தில் அபயகிரி விகாரை அமைக்கப்பட்டதுடன், திரிபிடகம் நூல் வடிவம் பெற்றது. பிற்காலத்தில் பௌத்த சங்கமானது பொருளாதாரப் பலமுடைய அமைப்பாகத் தோற்றம் பெற்றுக்கொண்டது. அந்தவகையில் அரசர்களாலும், அமைச்சர்களாலும் நிலம், பணம் முதலானவை தானமளிக்கப்பட்டன. மகாதாதிக மகாநாகன் விஹாரத்துக்கு பிக்குகளின் உபயோகத்துக்காக அரை யோஜனை அளவுள்ள நிலத்தைக் கொடையாக அளித்தான். இது பற்றி மகாவம்சம், பிராமிக் கல்வெட்டுக்கள் என்பவற்றில் சான்றுள்ளன (M.V.XXXIV: *93*).

*3)* இறந்தவர்களுக்கு அந்திமக் கிரியைகளை ஆற்றியமை: மன்னர்கள் இறந்தோருக்கு மரியாதை செய்து, உரிய வகையில் சடங்குகளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனை ஒரு அறமாக

நினைத்துச் செய்துள்ளமையைக் காணமுடிகின்றது. மகிந்ததேரர் இறந்ததும் மன்னன் உதயன் சடலத்தை வாசனைத் தைலம் தெளித்த தங்கப் பேழையில் வைக்கச் செய்தான். பின்னர் நன்கு அலங்கரிக்கப்பட்ட பாடையில் பேழையைத் தூக்கி வைத்து சடங்குகளைச் செய்தான். பன்ஹம்ப மாலக விஹாரத்தையும், அதைச் சுற்றி மூன்று யோஜனை தூரத்திற்கு உள்ள இடங்களையும் மலர்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கச் செய்து, நறுமணமுள்ள மரக்கட்டைகளைக் கொண்டு சிதையை அடுக்கி, அந்திமக் கிரிகையை தானே நடத்தி, அஸ்தியை எடுத்து சேதியமொன்றைக் கட்டினான் (M.V.XX:34-46). சங்கமித்தா தேரி இறந்தவிடத்தும், அதேபோன்று தூபராமாவுக்குக் கிழக்கே சித்ரசாலா அருகில் சடலத்தை எரித்ததுடன், அவ்விடத்தில் இவன் ஒரு ஸ்தூபம் கட்ட ஏற்பாடு செய்தான் (M.V.XX:49-53).

மன்னன் எல்லார போரில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், நகரில் முரசறைந்து ஒரு யோஜனே சுற்றளவுக்குள் இருந்த மக்களையெல்லாம் திரட்டி ஏலாராவின் அந்திமக் கிரியைகளை துட்டகைமுனு மன்னன் நடாத்தினான். அவன் போரிட்டு விழுந்த இடத்திலேயே அவனுடைய உடலை எரித்து அந்த இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பி அதற்கு வழிபாடுகள் நடத்தச் செய்தான். மகாவம்சம் தொகுக்கபட்ட கி.பி ஆறாம் நூறாறாண்டு வரை இலங்கையின் அரசர்கள் அந்த இடத்தைக் கடந்து செல்லும்போது இசையை நிறுத்திவிட்டு மௌனமாக வணங்கிவிட்டுப் போவார்கள் (M.V.XXV:72-73).

4) எல்லார மன்னனது அறச் செயல்கள்: சோழ நாட்டைச் சேர்ந்த உயர் குடியில் பிறந்தவனான எல்லாரன் (எல்லாளன்) இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசனான அசேலனை தோற்கடித்து இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டான். இவனைச் சிறந்ததொரு தர்ம நெறிகளைப் பின்பற்றிய அரசனாக மகாவம்சம் விபரிக்கின்றது. தேரவாத பௌத்த நெறி ஆதரவாளர் அல்லாத ஒருவனை மகாவம்சம் சிறப்பிக்கின்ற ஒரேயொரு தருணம் எல்லார பற்றிய கருத்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 44 ஆண்டுகள் அனுராதபுரத்தை ஆட்சி செய்த இவன், எதிரிகள் நண்பர்கள் என்ற பேதமின்றி, நீதியின் முன் எல்லோரையும் சமமாக நடத்தி வந்தான். எல்லாள பற்றிய அம்சங்களில் புராண அரசனான சிபிச்சக்கரவர்த்தி பற்றிய கதைகளின் செல்வாக்கினைக் காணமுடிகின்றது.

பண்டுகாபயனது காலத்தில் ஈழத்தில் மிகப் பழைய வழிபாடுகளில் ஒன்றாக சிவ வழிபாடு விளங்கியமைக்கு மகாவம்சம் மற்றும் பிராமிக் கல்வெட்டுக்கள் சான்றாக அமைகின்றன. அனுராதபுரத்தில் சிவிகசாலா, சோதிசாலா என்ற இரு வழிபாட்டு இடங்களை பண்டுகாபய மன்னன் அமைத்துக் கொடுத்தான் என மகாவம்சம் கூறுகின்றது. மேற்றிசை ராணிகளின் ஆலயம், வேசவனத்து ஆலயம், நிகந்தர், ஆஜிவகர், பிராமணர் முதலான சமயத் துறவிகளுக்கு மடம் அமைத்துக் கொடுத்தான் (M.V.X:*26-30, 96-102)*.

துட்டகைமுனு மன்னன் 18 இடங்களில் வைத்தியர்களின் கட்டளைப்படி நோயாளிகளுக்குத் தேவையான உணவுகளையும், மருந்துகளையும் வழங்கினான். 44 இடங்களில் தேன் கலந்த அன்னம், அதே அளவு இடங்களில் எண்ணெய் கலந்த அன்னம், வெண்ணெயில் தயார் செய்த ஜாலபூவா முதலானவற்றை தானமாக வழங்கினான் (M.V.XXXII:*33-57)*.

மகாவம்சம் மகாவிகாரைப் பின்னணியில் வரலாற்று விடயங்களைக் கூறிச் செல்கின்றமை நோக்கற்பாலது. இதில் ஏராளமான அறக்கருத்துக்கள் காணப்படுகின்ற போதிலும், ஆங்காங்கே சில அறமற்ற செயல்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி இந்நூல் கூறுகின்றது. விகாரமாதேவியின் கர்ப்ப கால ஆசைகள் பற்றிச் சொல்லுகின்றவிடத்து, எலாரவின் வீரர்களில் ஒருவனது கழுத்தை வெட்டிய கத்தியை கழுத உதவிய நீரைக் குடிக்க விரும்பியதாகவும், பின்னர் அவ்வாசை நிறைவேற்றப்பட்டமை பற்றியும் கூறப்படுகின்றது. அத்துடன் ராணியின் மகன் தமிழர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவான் எனக் கூறுவதனூடாக இனங்களுக்கிடையிலான பிரச்சினையை வலுப்படுத்திக் காட்டப்படுகின்றது (M.V.XXII:*44-48)*. இவற்றுடன் பௌத்த மார்க்கத்தை நம்பாதோர் அழிவடைவதற்குத் தகுதியுடையோர் என மகாவம்சத்தின் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றது (M.V.XV:*110)*, எவ்வாறாயினும் வரலாற்று விடயங்களைக் கூறுகின்ற பௌத்த சமய இலக்கியமான மகாவம்சம் அறக்கருத்துக்கள் பலவற்றை அழுத்தமாகக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

□□□□□